بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 21 March 2014 (Tamil)**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கான இறையடையாளங்கள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில எழுத்துக்களையும்,மேற்கோள்களையும், வழிகாட்டல்களையும் எடுத்துக் கூறுவேன். அதில் அவர்கள் தமது உண்மை, இறையடையாளங்கள், அற்புதங்கள் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** தமது வருகை, உண்மை ஆகியவை தொடர்பான சூரிய, சந்திர கிரகண அடையாளத்தைப் பற்றி எடுத்துரைத்தவாறு இவ்வாறு **கூறுகிறார்கள்:**

‘‘ (ஹதீஸ் தொகுப்பு நூலான) சஹீஹ் தார குத்னீயில் ஒரு ஹதீஸ் இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் இமாம் பாக்கிர் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: **இன்ன லிமஹ்தீனா ஆயதய்னி. லம் தகூனா முன்ஸு கல்கிஸ்ஸமாவாத்தி வல் அர்ழ். யன்கஸிஃபுல் கமரு லிஅவ்வலி லைலத்தின் மின் ரமழான. வ தன்கஸிஃபுஷ் ஷம்ஸு ஃபின்னிஸ்ஃபி மின்ஹு.** அதாவது ‘நமது மஹ்திக்கு இரண்டு அடையாளங்கள் இருக்கின்றன. வானங்கள், பூமி ஆகியவை படைக்கப்பட்டதிலிருந்து இந்த இரண்டு அடையாளங்களும் வேறு எந்த இறைதூதரின் காலத்திலும் வெளிப்படவில்லை. அவற்றில் ஒன்று, வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு (கிரகணம் ஏற்படும் இரவுகளில்) முதல் இரவில் கிரகணம் ஏற்படும்.’ அதாவது 13 - ஆவது இரவில் கிரகணம் ஏற்படும். ‘மேலும் சூரியனுக்கு (கிரகணம் ஏற்படும் நாள்களில்) மத்திய நாளில் கிரகணம் ஏற்படும். அதாவது அதே ரமலான் மாதத்தில் 27 - ஆவது நாளில் கிரகணம் ஏற்படும். மேலும் அப்படிப்பட்ட சம்பவம் உலகம் தோன்றிய நாள்தொட்டு எந்தவொரு இறைதூதரின் காலத்திலும் அல்லது நபியின் காலத்திலும் வெளிப்படவில்லை.’ வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் மட்டுமே அவ்வாறு நடப்பது விதிக்கப்பட்டிருந்தது. இப்போது எனது காலத்தில்தான் இப்படிப்பட்ட பண்புகளைக் கொண்ட சூரிய, சந்திர கிரகணம் நடந்திருக்கிறது. அது நடந்து ஏறக்குறைய 12 ஆண்டுகள் ஆகி விட்டன. இதற்கு அனைத்து ஆங்கிலேய, உருது பத்திரிகைகளும், அனைத்து வானியல் ஆராய்ச்சியாளர்களும் சாட்சிகளாவர். இன்னொரு நபிமொழியில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, இந்த கிரகணங்கள் ரமலானில் இரண்டு முறை நடைபெற்றுள்ளன. ஒன்று, இந்த நாட்டில் நடந்தது; இன்னொன்று அமெரிக்காவில் நடந்தது. நபிமொழி சுட்டிக்காட்டுவது போன்று, இவ்விரண்டுமுறையும் இதே நாட்களில்தான் நடந்தது.’’

(அதாவது சந்திர கிரகணம், கிரகணம் ஏற்படும் இரவுகளில் முதல் இரவாகிய 13 - ஆவது இரவிலும், சூரிய கிரகணம் கிரகணம் ஏற்படும் நாள்களில் மத்திய நாளாகிய 27- ஆவது நாளிலும் நடந்தது.)

‘‘ மேலும் இந்த கிரகணம் நடக்கும்போது என்னைத் தவிர பூமியில் மஹ்தி என வாதிப்பவர் வேறு யாரும் இருக்கவில்லை. மேலும் எவரும் என்னைப் போன்று இந்த கிரகணத்தை தனது மஹ்திக்கான அடையாளமாகக் குறிப்பிட்டவாறு உருது, ஃபார்ஸி, அரபி ஆகிய மொழிகளில்

நூற்றுக்கணக்கான பிரசுரங்களையும், பத்திரிகைகளையும் உலகில் வெளியிடவில்லை. எனவே வானத்தின் இந்த அடையாளம் எனக்காக நியமிக்கப்பட்டது. இதற்கு இன்னொரு சான்று என்னவெனில், இந்த அடையாளம் வெளிப்படுவதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அடையாளம் தொடர்பாக அப்படிப்பட்ட அடையாளம் வெளிப்படும் என இறைவன் எனக்கு செய்தி தெரிவித்திருந்தான். அந்த செய்தி பராஹீனே அஹ்மதிய்யா நுலில் குறிப்பிடப்பட்டு இந்த அடையாளம் வெளிப்படுவதற்கு முன்பே இலட்சக்கணக்கான மக்களிடம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த நபிமொழியைப் பற்றி இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' இந்த ஹதீஸ் ஒரு மறைவான செய்தியை உள்ளடக்கியதாகும். அது 1300 ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேறி இருக்கிறது. அதன் சுருக்கம் என்னவெனில், வாக்களிக்கப்பட்ட மஹ்தி தோன்றும் காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு 13 - ஆவது இரவில் கிரகணம் ஏற்படும்; அவ்வாறே அதே மாதத்தில் சூரியனுக்கு 27- ஆவது நாளில் கிரகணம் ஏற்படும். மேலும் அத்தகைய சம்பவம் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தை தவிர வேறு எந்த வாதியின் காலத்திலும் நிகழாது. இப்படிப்பட்ட மிகத் தெளிவான, மறைந்த விஷயத்தை தெரிவிப்பது நபியைத் தவிர வேறு எவருடைய வேலையுமன்று என்பது வெளிப்படை. அல்லாஹ் திருக்குர்ஆனில், **'லாயுழ்ஹிரு அலா கைபிஹீ அஹதன் இல்லா மனிர்தழா மின்ர் ரஸூல்'** எனக் கூறுகின்றான். அதாவது, இறைவன் தனது மறைவான செய்திகளை தான் தேர்ந்தெடுத்த தூதர்களைத் தவிர வேறு எவருக்கும் வெளிப்படுத்துவதில்லை. எனவே இந்த முன்னறிவிப்பு தனது பொருள்களின் அடைப்படையில் முழுமையாக நிறைவேறிவிட்ட பிறகு இந்த நபிமொழி பலவீனமானது என்றோ, இது இமாம் முஹம்மது பாக்கிர் அவர்களின் கூற்று என்றோ கூறுவதெல்லாம் வீண் சாக்குப்போக்குகளாகும். உண்மை எனவெனில், இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதாவதொரு முன்னறிவிப்பு நிறைவேறுவதை அல்லது திருக்குர்ஆனின் ஏதாவதொரு முன்னறிவிப்பு நிறைவேறுவதை ஒருபோதும் விரும்புவதில்லை. **இப்போது (இமாம் மஹ்தியைக் குறித்த) உண்மைக்கான இந்த அடையாளம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறிய அடையாளமாகும்.''**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னோர் அடையாளத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' சூரியன் மறைந்ததற்குப் பிறகு எனது தந்தை மரணித்துவிடுவார்கள் என எனக்கு செய்தி அறிவிக்கப்பட்டபோது, மனிதன் என்ற முறையில் எனக்கும் அந்த செய்தியைக் கேள்விப்பட்டு துக்கம் ஏற்பட்டது. ஏனெனில் எமது வாழ்விற்கான பெரும்பலான காரணங்கள் (தந்தையாகிய) அவர்களின் வாழ்வையையே சார்ந்திருந்தது. மேலும் அவர்கள் ஆங்கிலேய அரசாங்கத்திடமிருந்து பென்ஷன் வாங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும் ஒரு பெரும் தொகையையும் சன்மானமாகப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அது அவர்களின் வாழ்வு வரை (கிடைக்கும்) என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது. எனவே அவர்களின் மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்ற சிந்தனை தோன்றியது.ஒருவேளை வறுமை, துன்பத்திற்கான நாட்கள் நமக்கு வருமோ என்ற எண்ணம் தோன்றியது. இந்த அனைத்து எண்ணங்களும் மின்னலைப் போன்று ஒருநொடிப்பொழுதுக்கும் குறைந்த நேரத்திற்குள் உள்ளத்தில் ஓடியது. அப்போது அந்த நேரத்திலேயே மயக்கமான ஒரு நிலை ஏற்பட்டு **'அலைஸல்லாஹுு பிகாஃபின் அப்தஹுூ'** என்ற இன்னோர் இல்ஹாம் இறங்கியது. அதாவது அல்லாஹ் தன் அடியானுக்குப் போதுமானவன் இல்லையா? ஒரு கடுமையான வேதனையுடன் உள்ள காயம் ஒரு மருந்து தடவுவதனால் ஒரு நொடிப்பொழுதில் சரியாகி விடுவதைப் போன்று இந்த இறையறிவிப்பினால் உள்ளம் உறுதியாகி விட்டது.

உண்மையில், இறைவனின் வஹியில் உள்ளத்திற்கு ஆறுதல் அளிப்பதற்கான ஒரு சிறப்புத்தன்மை இருக்கிறது என்பதும், அந்த சிறப்புத்தன்மைக்கான வேர் இறைவனின் வஹியின் மீது இருக்கும் அந்த உறுதிதான் என்பதும் பல முறை சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது. இந்த மக்களின் இல்ஹாம்கள் எப்படி இருக்கின்றன? என்பது வருத்தத்திற்குரியதாகும். இல்ஹாம் என வாதிட்டபோதிலும் எங்களின் இல்ஹாம் சந்தேகத்திற்குரியவையாகும். அவை ஷைத்தானியவையா? அல்லது ரஹ்மானியவையா? என்பது தெரியாது எனக் கூறுகின்றனர்.

அப்படிப்பட்ட இல்ஹாம்களின் நஷ்டம் அதன் பயனை விட அதிகமானதாகும். ஆனால் திருக்குர்ஆனின் மீதும், இறைவனின் மற்ற வேதங்களின் மீதும் நம்பிக்கை கொள்வதைப் போன்றே (எனக்கு இறங்கிய) இந்த இல்ஹாம்களின் மீதும் நான் நம்பிக்கை கொள்கின்றேன் எனவும், திருக்குர்ஆனை இறைவனின் வார்த்தை என உறுதியாகவும் வலுவாகவும் நம்புவதைப் போன்றே என் மீது இறங்குகின்ற வார்த்தையையும் இறைவனின் வார்த்தை என உறுதி கொள்கிறேன் எனவும் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். ஏனெனில் அத்துடன் நான் இறைவனின் ஒளியையும் பொலிவையும் காண்கின்றேன். மேலும் இறைஆற்றல்களின் முன்மாதிரிகளைக் காண்கின்றேன். சுருக்கமாக, **'அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு'** (அல்லாஹ் தன் அடியானுக்குப் போதுமானவன் இல்லையா?) என்ற இல்ஹாம் இறங்கிய நேரத்திலேயே இறைவன் என்னை வீணாக்க மாட்டான் என நான் புரிந்து கொண்டேன். காதியானில் வாழ்கின்ற மலாவாமல் என்ற பெயரைக் கொண்ட ஓர் இந்து - அவர் இப்போதும் உயிருடன் இருக்கிறார். அவருக்கு அந்த இல்ஹாமை எழுதிக் கொடுத்தேன். மேலும் முழு சம்பவத்தையும் அவருக்கு எடுத்துக் கூறி, காலானுரைச் சேர்ந்த ஹகீம் மவ்லவி முஹம்மது ஷரீஃப் சாஹிப் மூலமாக அதை ஏதாவதொரு மோதிரத்தில் எழுதி பதித்து முத்திரையாக உருவாக்கிக் கொண்டுவருவதற்காக (மலாவாமல் ஆகிய) அவரை அமிர்தரஸசுக்கு அனுப்பினேன். மேலும் அந்த மகத்தான முன்னறிவிப்பிற்கு அவரும் சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் அவரை பயன்படுத்தினேன். மேலும் மவ்லவி முஹம்மது ஷரீஃப் அவர்களும் சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தேன். மவ்லவி முஹம்மது ஷரீஃப் அவர்கள் மூலமாக அந்த மோதிரம் ஐந்து ரூபாய் செலவில் ஆயத்தமாகி என்னிடம் வந்து சேர்ந்து விட்டது. அது இப்போது வரை என்னிடம் இருக்கிறது.

எங்களின் வாழ்க்கை, வசதிகள் அனைத்தும் எங்களுடைய தந்தையின் குறைந்த அளவிலான வருவாயைச் சார்ந்திருந்த அந்த காலத்தில் இந்த இல்ஹாம் இறங்கியது. வெளி உலகத்திலிருந்து எவரும் என்னை அறியாதிருந்தார். காதியான் போன்ற வெறிச்சோடிக் கிடந்த, பெயர் அறியாத கிராமத்தில் இருந்த, பெயர் அறியப்படாத ஒரு மனிதனாக இருந்தேன். பிறகு இதற்குப் பின்னர் இறைவன் தனது முன்னறிவிப்பிற்கேற்ப ஓர் உலகத்தை என் பக்கம் திருப்பினான். மேலும் எத்தகைய தொடர்சியான வெற்றிகளினால் உதவி செய்தான் என்றால், அதற்கு நன்றி செலுத்துவதற்கு என்னிடம் சொற்கள் இல்லை. எனக்கு எனது நிலை குறித்து எண்ணி, மாதம் 10 ரூபாய் வரும் என்ற அளவுக்குக் கூட நம்பிக்கை இல்லாமல் இருந்தது. ஆனால் **ஏழைகளை மண்ணிலிருந்து எழுப்புகின்றவனும், ஆணவம் கொண்டவர்களை மண்ணோடு மண்ணாக்குகின்றவனுமாகிய அந்த இறைவனே என்னை அரவணைத்தான்.** இப்போது வரை மூன்று லட்சம் ரூபாய் வந்து விட்டது என நான் உறுதியுடன் கூற முடியும்; ஒரு வேளை அதை விட அதிகமாகவும் இருக்கலாம். இந்த வருவாயிலிருந்து, ஆண்டு தோறும் லங்கர் கானாவிற்கு (விருந்தினர் இல்லத்திற்கு) ஒன்றரை லட்சம் ரூபாய் மாதாமாதம் செலவாகிறது என கணித்துக் கொள்ளலாம். அதாவது கணிசமான கணக்கின்படி. மேலும் மற்ற செலவுகளாகிய மத்ரஸா மற்றும் நூல்கள் அச்சடித்தல் ஆகியவை தனியாகும். எனவே **'அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு'** (அல்லாஹ் தன் அடியானுக்குப் போதுமானவன் இல்லையா?) என்ற இல்ஹாம் எவ்வளவு தெளிவாகவும், மகத்தான முறையிலும் நிறைவேறியிருக்கிறது! இது ஓர் இட்டுக்கட்டிக் கூறுபவரின் வேலையா? அல்லது ஷய்த்தானிய ஊசலாட்டங்களா என்ன? ஒருபோதும் அன்று. மாறாக, இது, எவனுடைய கையில் கண்ணியமும் இழிவும், உயர்வும் தாழ்வும் இருக்கிறதோ அந்த இறைவனின் வேலையாகும். எனது இந்தக் கூற்றில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், இந்த வகைக்காக எந்த அளவுக்கு வருவாய்க்கான வாசல் திறக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு 20 ஆண்டுகளாக வந்த அரசு பதிவுத் தபால்களைப் பாருங்கள்.''

அடுத்து, ஜமாஅத்தின் முன்னேற்றம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு, வழிகாட்டல்கள் ஆகியவற்றை ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்: இன்று அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் 204 நாடுகளில் நிலைபெற்றிருக்கிறது. மேலும் அல்லாஹ்வின் அருளினால் கோடிக்கணக்கானோர் இதில் இருக்கின்றனர். மேலும் **MTA** மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியும் சென்றடைந்து கொண்டிருக்கிறது.

ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த இன்னோர் இல்ஹாமை எடுத்துரைத்தார்கள். அதில் எதிரிகளிலிருந்து அன்னாரைக்

காப்பாற்றுவதாக அல்லாஹ் அன்னாருக்கு வாக்குறுதி அளித்திருந்தான். அந்த இல்ஹாம்: **'யஃஸிமுகல்லாஹு மின் இந்திஹீ. வலம் யஃஸிமுகன்னாஸ்.'** (பொருள்: மக்கள் உம்மைக் காப்பற்ற மாட்டார்கள்;அல்லாஹ் உம்மை தன் புறமிருந்து காப்பாற்றுவான்.) இது தொடர்பாக ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பாதிரி மார்டின் கிளார்க் என்பவரின் வழக்கு பற்றி குறிப்பிட்டார்கள். அதில் பாதிரி மார்டின் கிளார்க், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டியிருந்தார். அல்லாஹ் இதிலிருந்து அன்னார் (அலை) அவர்களை அற்புதமான முறையில் கண்ணியத்துடன் விடுவித்தான். ஹுஸூர் அவர்கள் அந்த சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் கீழ்வரும் அந்த முன்னறிவிப்பையும் எடுத்துக் கூறினார்கள்:

**'ஃபபர்ரவுஹுல்லாஹு மிம்மா காலூ இந்தல்லாஹி வஜீஹா.'** அதாவது இறைவன் அவர் மீது சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவித்தான். மேலும் அவர் இறைவன் பார்வையில் கண்ணியத்திற்குரியவராக இருக்கிறார்.

பாருங்கள். இன்றும் மேற்கூறிய இந்த இல்ஹாம் மிகவும் மகத்தான முறையில் நிறைவேறி இருக்கிறது. 'எங்களுடைய முப்பாட்டனார் தவறான வழியில் இருந்தார்; மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி உண்மையாளராக இருந்தார்' என டாக்டர் மார்டின் கிளார்கின் கொள்ளுப் பேரர் நமக்கு முன்னால் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். இதனை அவர் ஆண்டுமாநாட்டில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

அடுத்து, ஹுஸூர் அவர்கள், மவ்லவி குலாம் தஸ்தகீர் என்பவர் முபாஹலாவின் விளைவாக அழிவுக்குள்ளானது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்களின் கூற்றுகளிலிருந்து எடுத்துரைத்தார்கள். இவ்வாறு அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்களின் உண்மைக்கு அடையாளமானார்.

இதற்குப் பிறகு அல்லாஹ்வின் சார்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அரபி மொழிப் புலமை, சொற்செறிவுடனும் கருத்துச் செறிவுடனும் எழுதும் திறன் ஆகிய அற்புதங்களைப் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் தமது அகப்பார்வை கொண்ட பேருரையை தொடர்ந்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

எப்படி இருந்தபோதிலும் நான் சில அடையாளங்களை எடுத்துக் கூறியிருக்கிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று, இந்த அடையாளங்கள் இலட்சங்களை எட்டுகின்றன. அவை அன்னாரின் உண்மைக்கு சான்றுகளாக இருக்கின்றன. அவை நின்று விடவில்லை; இன்றும் தொடர்கின்றன. அல்லாஹ்வின் அருளினால் இந்த அடையாளங்களைக் கண்டு மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர்; பைஅத் செய்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் பைஅத்தில் அஹ்மதிகள் வந்து கொண்டிருக்கின்றனர். ஆயினும் சில இடங்களில் அஹ்மதிகளுக்கு கண்டிப்பாக துன்பங்களை சந்திக்க வேண்டியதிருக்கிறது; கஷ்டங்களை எதிர்க்கொள்ள வேண்டியதிருக்கிறது. நேரம் வரும்போது அவையும் நீங்கி விடும் - இன்ஷா அல்லாஹ். மேலும் அவற்றைக் கண்டவாறு நமது ஈமானும், உறுதியும், இறைஞானமும் கண்டிப்பாக அதிகமாகும்.

கடைசியாக ஹுஸூர் அவர்கள் துஆவுக்காக நினைவூட்டியவாறு, சிரியா நாட்டிலுள்ள அஹ்மதிகளுக்காகவும், பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்ய வேண்டிய தேவை இருக்கிறது எனக் கூறினார்கள். அவ்வாறே எகிப்திலுள்ள அஹ்மதிகளுக்கும் சில துன்பங்களும் கஷ்டங்களும் இருப்பதாகவும் அல்லாஹ் அவர்கள் அனைவரின் கஷ்டங்களை நீக்குவானாக; இது தொடர்பாகவும் நாம் சிறப்பான இறையடையாளத்தைக் காண்பவர்களாவோமாக. இவர்கள் சுதந்திரமான முறையில் தமது மார்க்கத்தை பறைசாற்றக் கூடியவர்களாகட்டுமாக. அல்லாஹ்வின் பக்கம் குனிபவர்களாகட்டுமாக. நம்மால் தொழ முடியாமலும் இறைவணக்கங்களில் ஈடுபட முடியாமலும் இருக்கும் வகையில் நம் மீது இருக்கும் இந்தக் கட்டுப்பாடுகளை எல்லா இடத்திலும் அல்லாஹ் நீக்குவானாக.

By: **Nazarat Nashr-o-Isha'at Qadian** Translated By: O.M.Muzzammil Ahmad